அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் : 03/2017

எனது இல. EST - 6/OFTIM/07/4021
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2017.04.19

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்கள தலைவர்கள்
அரசாங்க கூட்டுத்தாபன/ நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்

**உள்வருகை மற்றும் வெளிச்செல்கையை உறுதிப்படுத்துவதற்காக விரலடையாளப் பதிவு இயந்திரங்களை உபயோகித்தல்.**

மேற்படி விடயம் சம்பந்தமாக வெளியிடப்பட்ட 2009.04.16 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 09/2009 மற்றும் 2009.06.17 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 09/2009 (I) தொடர்பாக தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. அனைத்து அரசாங்க நிருவனங்களிலும் விரலடையாளப் பதிவு இயந்திரங்களை பயன்படுத்துவதன் மூலம் அரசாங்க அலுவலர்களது, உள்வருகை மற்றும் வெளிச்செல்கையை குறித்து உறுதிப்படுத்துவது சம்பந்தமான அறிக்கைகளை வைத்திருக்கும்படி அச் சுற்றறிக்கை வாயிலாக அறிவுரைகள் மற்றும் ஏற்பாடுகள் வெளியிடப்பட்டிருந்த போதிலும், சில அரசாங்க நிறுவனங்களில் அச் செயன்முறை இதுவரை கடைப்பிடிக்கப்படுவதில்லை என அறியக் கிடைத்துள்ளது.

03. கௌரவ நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 2017 வரவு செலவுத்திட்ட முன்மொழிவு இல. 373 இன் கீழ் அனைத்து அரசாங்க நிறுவனங்களினதும், ஆளணியினரின் உள்வருகை மற்றும் வெளிச்செல்கை தொடர்பாக விரலடையாளப் பதிவு இயந்திரங்களை பயன்படுத்த வேண்டும் என முன்மொழியப்பட்டுள்ளது.

04. ஆதலால், இச் செயன்முறையை இதுவரை செயற்படுத்த இயலாமற்போன அனைத்து அரசாங்க நிறுவனங்களும், இங்கு முதலாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் விரலடையாளப் பதிவு இயந்திரங்களை உபயோகித்து அலுவலர்களது உள்வருகை மற்றும் வெளிச்செல்கை தொடர்பாக உறுதிப்படுத்துவது சம்பந்தமான அறிக்கைகளை வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஒப்பம்/. ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு